

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆயிங்குடி ஊராட்சியில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில், புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்து, விவசாயிகளிடமிருந்து நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யும் பணியினை துவக்கி வைத்தார். உடன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கோவை பீளமேடு அண்ணா நகர் அலுவலகத்தில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த வழக்கறிஞர் ராஜ்குமார், டாக்டர். ரதீஷ்குமார், எஸ்.ஆர்.ஸ்ரீவத்சன், ஏ.வி.தமிழரசி, சுசீலா, மஞ்சுளா, சிந்து, ஜோதிமணி, பானுமதி ஆகியோர் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் பொதுக்குழு உறுப்பினர் ஆடிட்டர் சசிகுமார், ஒண்டிப்புதூர் பகுதி பொறுப்பாளர் கஸ்தூரி அருண், 56 வட்டக் கழகச் செயலாளர் த.சுரேஷ்குமார், என்.டி.சின்னச்சாமி, சிங்கை சௌந்தர், சதீஷ்குமார், கனகராஜ் உள்பட பலர் உள்ளனர்.

### மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.மணிகண்டன் வரவேற்புரை!

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. சிறப்புரை ஆற்றினார்!

சேலம், ஜூலை 2 -

கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் எடப்பாடி பழனிக்கவுண்டர் திருமண மண்டபத்தில் சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.மணிகண்டன் வரவேற்புரையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**தீர்மானம் 1**

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாள் மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெரு முனை கூட்டங்கள்:

எல்லோரும் எல்லாம் பெற எந்நாளும் உழைத்து கண்ணை இமை காப்பது போல் தமிழ் மண்ணை காக்கும் மகத்தான தலைவர், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,

திருச்சியில் நடைபெற்ற கழக இளைஞர் அணியின் மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில்,

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படி, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழர் நலன் காத்த அவர்களின் புகழ் பரப்பும் வகையிலும் , கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களை கொண்டு சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி ஆலோசனையின்படி சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர்களில் *4.7.2025* அன்று தொடங்கி *11.7.2025* அன்று வரை *31* தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களை நடத்துவதென்று சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணியின் சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**தீர்மானம் 2 :**

ஒன்றிய, நகர, பேரூர்களில் கிளை மற்றும் வார்டுகளுக்கு இளைஞர் அணி நிர்வாகிகள் நியமனம்:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க சேலம் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி ஆலோசனையின்படி சேலம் மேற்கு மாவட்டத் திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்களில் உள்ள கிளை மற்றும் வார்டு அமைப்புகளுக்கு ஒரு அமைப்பாளர் மூன்று துணை அமைப்பாளர்கள் என்ற அடிப்படையில் இளைஞர் அணி நிர்வாகிகள் இந்த இயக்கத்தை மேலும் நூற்றாண்டு காலம் எடுத்து செல்லக்கூடிய வகையில் சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் பரிந்துதுரைகளை பெற்று கழகத்திற்காக உழைக்க கூடிய இளைஞர்களை நிர்வாகிகளாக நியமித்து விரைவில் பட்டியலை ஒப்படைக்க வேண்டுமென்று சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தீர்மானம் 3**

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதள பயிற்சி கூட்டம்:

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி நவீன அரசியலின் பரப்புரை களமாக உருவாகி இருக்கும் நமது இளைஞர் அணி சிறப்பாக செயல்பட புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கும், தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கும் சமூக வலைதள பயிற்சியை தமிழ்நாடு முழுவதும் கழக இளைஞர் அணி வழங்கி வருகிறது. அதன் நீட்சியாக கழகத்தின் கொள்கைகளையும், திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் கொண்டு சேர்க்கும் வகையில் களத்திற்கு நிகராக சமூக வலைதளங்களில் களமாட இளைஞர் அணி பணியாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள சங்ககிரி, எடப்பாடி, மேட்டூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதி வாரியாக சமூக வலைதள பயிற்சி கூட்டம் நடத்துவதென்று சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தீர்மானம் நிறைவேற்றபடுகிறது.

**தீர்மானம் 4:**

மூன்று தொகுதிகளிலும் கண்டன பொதுக்கூட்டத்தை வெற்றிகரமாக நடத்த ஒத்துழைப்பு வழங்கிய நிர்வாகிகளுக்கு நன்றியும், பாராட்டுகளும்

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் இந்தி திணிப்பு, தமிழ்நாட்டுக்கு நிதி பகிர்வில் ஒன்றிய அரசின் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் சேலம் மேற்கு மாவட்டத் திற்குட்பட்ட சங்ககிரி, எடப்பாடி, மேட்டூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும் சேலம் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி தலைமையில் மிகச்சிறப்பாக நடத்திட முழு ஒத்துழைப்பு நல்கிய ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுக்கு நன்றியையும், உற்ற துணையாக தோளோடு தோள் நின்று பணியாற்றிய ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணி தம்பிமார்கள் அனைவருக்கும் சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் இக்கூட்டத்தின் வாயிலாக வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.




தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஈரோடு வடக்கு மாவட்டம் டி.என்.பாளையம் வடக்கு கழக ஒன்றிய தி.மு.க. அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் ஓரணியில் தமிழ்நாடு, உடன்பிறப்பே வா வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்களுக்கான பயிற்சிக் கூட்டம் அத்தாணியில் உள்ள எஸ்.எம்.பி.மஹாலில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் முன்னிலையில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் டி.என்.பாளையம் வடக்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளர் எம்.சிவபாலன், பேரூர் கழகச் செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் BDA உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கில் மாமன்ற சாதாரணக் கூட்டம் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் தலைமையில், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் துணை மேயர் ரா.வெற்றி செல்வன், துணை ஆணையாளர்கள் அ.சுல்தானா, த.குமரேசன், மண்டல குழுத்தலைவர்கள் இலக்குமி இளஞ்செல்விகார்த்திக் (கிழக்கு), கே.ஏ.தெய்வயானை தமிழ்மறை (மேற்கு), வே.கதிர்வேல்(வடக்கு), ர.தனலட்சுமி (தெற்கு), மீனா லோகு (மத்தியம்), நிலைக்குழுத் தலைவர்கள் தீபா தளபதி இளங்கோ (கணக்குகள்), சாந்தி முருகன் (பணிகள்), மாலதி நாகராஜ் (கல்வி & பூங்கா), வி.பி.முபசீரா (வரிவிதிப்பு & நிதி), பெ.மாரிசெல்வன் (பொது சுகாதாரம்), சோமு (எ) சந்தோஷ் (நகரமைப்பு), மு.ராஜேந்திரன் (நியமனக்குழு) உள்பட நிலைக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மண்டல உதவி ஆணையர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு ஆலோசனை வழங்கினார்!

# திருவாரூர் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் - வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர், ஜூலை 2 -

திருவாரூர் மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) கூட்டம் அவைத் தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. கழக முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சருமான கே.என்.நேரு பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

தொழில்முதலீடு மற்றும் ஊக்குவிப்புத்துறை அமைச்சரும் தகவல் தொழில்நுட்ப அணி செயலாளருமான டி.ஆர்.பி.ராஜா டிஜிட்டல் வாக்குசாவடி முகவர்கள் பணிகள் குறித்தும் அதன் அவசியங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

கூட்டத்தில் மண்ணின் மைந்தர் செந்தமிழ் நாயகர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின்திருவுருவச்சிலை திறப்புவிழா மற்றும் பல்வேறு அரசு நிகழ்சிகளில் பங்கேற்க திருவாரூர் மாவட்டம் வருகை தரும் திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு திருவாரூர் மாவட்ட எல்லையான கோவில் வெண்ணியில் மாவட்டக் கழகம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிப்பது.

இந்தித்திணிப்பு, கல்வி நிதி மறுப்பு, கூட்டாட்சி முறையை சிதைப்பது, மக்கள் தொகை கணக்கெடுப்பை காலம் தாழ்த்துவது, தொகுதி மறு வரையரை என தொடர்ந்து மத்திய அரசால் பல அநீதிகளை சந்தித்துவரும் நமது தமிழ்நாட்டு மக்களுக்காகவும், நமது மண், மொழி, சுயமரியாதை மீது தொடுக்கப்படும் போருக்கு எதிராக, நமது திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் துவக்கப்படும் "ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை" திருவாரூர் மாவட்டத்தில் சிறப்பாக நிறைவேற்றி வெற்றிகாண்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் தாட்கோ தலைவர் நா.இளையராஜா, தொகுதி பொறுப்பாளர்கள் எஸ்.கே.வேதரத்தினம், ராஜாசீனிவாசன், ஜெகவீர பாண்டியன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர். எஸ்.பாண்டியன், ப.ஆடலரசன், கோ.செல்வம், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.எஸ். எஸ்.தியாகபாரி, கலைவாணி மோகன், செல்வா ஜெயதேவன், காஞ்சித்துரை, மாவட்ட துணைச் செயலாளர்கள் எம். எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், பொருளாளர் மு.வெங்கடேசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பணகுடி ஏ.எஸ்.குமார் உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், வீ.அன்பரசன், ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள் புலிவலம் ஏ.தேவா உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் வாக்குச்சாவடி முகவர்கள் பங்கேற்றனர்.




நீலகிரி மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி கூட்டம், மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு தலைமையில், தேர்தல் பணி செயலாளர் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட அவைத் தலைவர் போஜன், மாவட்ட துணைச் செயலாளர் ரவிகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன், மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் சண்முகன், செந்தில், ஜெய் விக்னேஷ், பிருந்தா, தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் மத்தீன், லெனார்டு, பாலசுப்ரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## புலவர் கோவிந்தன்

**ஜூலை 2 (1991)**



**1937ஆம் ஆண்டில் தமது இருபதாவது வயதில் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, தலைவர் கலைஞரின் உற்ற தோழனாக இருந்து இளமை மிடுக்கு மாறாமல், கழக அடலேறென அயர்வின்றி பணியாற்றியவர்.**

**1958ல் திருவத்திபுரம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும் 1962லிருந்து தொடர்ந்து பத்தாண்டுகள் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், 1967ல் சட்டப்பேரவையின் துணைத் தலைவராகவும், 1969 பிப்ரவரி முதல் பேரவையின் தலைவராகவும் பொறுப்பேற்று மாற்றுக் கருத்துக் கொண்டோரும் போற்றும் வகையில் திறம்பட பணியாற்றியவர்.**

**பேரறிஞர் அண்ணாவிடம் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும் விழாவில் இவருக்கு "அண்ணா விருது" வழங்கி சிறப்பித்தார்.**

**"கழகத்தையும் பொதுப்பணியையும் இரு கண்களாகக் கொண்டு செயலாற்றிய அந்தச் செந்தமிழ் அறிஞரின் புகழ் என்றும் நிலைக்கும்!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**